Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பௌத்த சமயத்தின் கட்டடக்கலை நுட்பங்கள்

முனைவர் இரா. புவனேஸ்வரி
ஆசிரியப் பணியாளர் ,தமிழ்ப் பிவுரி,
பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி, திண்டிவனம்.
drbhuvaneswaritamil@gmail.com



**ஆய்வுச் சுருக்கம்**

உலகநாடுகளில் நாகரிக வளர்ச்சியிலும் சமயப் பொதுமையிலும் தனித்துவம் வாய்ந்த நாடாக விளங்கி வருவது இந்திய நாடாகும். பல்வேறு பண்பாட்டு நிகழ்வுகளை மக்கள் சமயங்களோடு பிணைந்த வாழ்க்கையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதில் கட்டடக்கலை முறையானது இருப்பிடத்திலிருந்து கோயில் வழிபாட்டுமுறை வரை பல்வேறு பரிணாமங்களில் வளர்ச்சி அடைந்துள்ளது. இவற்றில் பௌத்த சமயத்தினரின் கட்டடக்கலை தொழில் நுட்பத்தை விளக்குகிறது இக்கட்டுரை.

**திறவுகோள்**

பௌத்தம், புத்தர், கட்டடக்கலை, தொல்லியல், அகழ்வாராய்ச்சி, ஸ்தூபி

**முன்னுரை**

மனிதனின் அடிப்படைத் தேவைகள் மூன்று. அவை உணவு, உடை, உறையுள் (தங்கும் இடம்). பறவைகள் கூடுகட்டி வாழ்வதையும் விலங்குகள் தாம் தங்குவதற்கு ஏற்றவகையில் குகை முதலியற்றை நாடி வாழ்வதையும் பார்த்த மனிதன் தானும் தங்குவதற்கு உரிய இடம் குறித்து எண்ணத் தொடங்கினான். அதன் விளைவே கட்டடக்கலை உருவாக்கம் ஏற்பட்டது. நாகரிக வாழ்வின் முதல் படிநிலையாகத் திணைசார் வாழ்க்கை மரபில் தன் னை ஈடுபடுத்திக்கொண்ட தமிழர்கள் இறைவழிபாட்டை இன்றியமையாத ஒன்றாகக் கருதினர். அதன் வளர்ச்சிநிலையே சைவம், வைணம், பௌத்தம், சமணம், இசுலாமியம், கிறித்தவம் போன்ற சமயங்களாகும். இயற்கை வழிபாட்டில் தொடங்கி அருவமாக வளர்ச்சியடைந்து உருவ வழிபாட்டின் உச்சநிலையில் இன்று தமிழர்களின் வழிபாடுகள் நிற்கின்றன. இதில் பௌத்த சமண உருவ வழிபாட்டிற்கான கட்டடக்கலை முற்றிலும் மாறுபட்ட நிலையில் காணப்படுகிறது. இதனை விளக்குமுகமாக இக்கட்டுரை அமைகிறது.

**கோயில் கட்டடக்கலை மரபு**

மனிதனின் ஒவ்வொரு அசைவும் ஒவ்வெரு கலையாக உருவெடுக்கிறது. அதன் விளைவாக மாந்தரின் வாழ்வில் பல வகையான கலைகள் வளர்ந்தன. அவ்வாறு வளர்ந்த கலைகளின் எண்ணிக்கை அறுபத்து நான்கு என மணிமேகலை கூறுகிறது.[1] மனிதனுடைய மனத்தில் உணர்ச்சியை எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கின்ற பண்பு அழகுக் கலைகளுக்கு உண்டு. அந்த அழகுக் கலைகள் ஐந்து வகைப்படும். அதில் முதலாவதாகச் சுட்டப்படுவது


Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கட்டடக்கலையாகும். இதன் சிறப்பைத் "தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்" நூலில் மயிலை சீனி. வேங்கடசாமி விதந்து குறிப்பிடுகிறார்.[2]

ஒரு நாட்டின் நாகரிகச் சின்னமாக விளங்கக் கூடியது கோயிற் கட்டடக்கலை. தமிழகத்தில் தெய்வ வழிபாட்டுமுறை, காலத்தின் கட்டாயத் தேவையானபோது கோயில்கள் மரம், மண், சுண்ணாம்பு முதலியவற்றைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன. அவை காலத்தை எதிர்த்து நிற்க முடியாமல் சிதைந்து போயின. இதனைப் புரிந்து கொண்ட மனிதன் அழியா நினைவுச்சின்னங்களை எழுப்புவதற்கு திட்டமிட்டான். அதுவே கற்றளி, குடைவரை, குகை என்று கோயில் கட்டடக்கலையின் மாற்றுப் பொருளானது. தமிழகத்தில் பல்வேறு சமயங்கள் நிலவிவந்த நிலையில் பௌத்தம் தனது கொள்கைகளை நிலைநாட்ட வேண்டிய கட்டாயத்திற்கு கோயில் கட்டடக்கலை மரபைப் பின்பற்ற வேண்டிய நிலை உருவானது.

**பௌத்த கட்டடக்கலை நுட்பங்கள்**

புத்தரை மனித உருவில் சிற்பமாக வடிக்காத தேரவாத பௌத்தம் வலிமை குன்றியபோது மகாயானப் பிரிவு தோன்றி புத்தரை மனித உருவில் வணங்கத் தொடங்கினர். அப்போது புத்தரின் வடிவங்கள் பௌத்தக் கலை மரபில் தோன்றி வளர்ந்தன. பௌத்தர்கள் தங்கள் சமயப் பெரியர்களின் ஈமச்சின்னங்களைப் புதைத்தவிடங்களில் ஒரு மேடையமைத்து அதன் மீது உருண்டை வடிவ மேடு கட்டினர். இதனை ஸ்தூபி என்றழைத்தனர். இவை காலங்களுக்கும் இடங்களுக்குமேற்ப சிற்சில மாறுதல்களுடன் காணப்படுகின்றன. ஸ்தூபி புத்தரது பரிநிர்வாணத்தைக் குறிக்கும் புனிதச் சின்னம். எனவே அது வழிபாடு பொருளாயிற்று. புத்தர் பரிநிர்வாணமடைந்ததும் புதைத்த இடங்களில் செங்கற்களாலும், மணலாலும் எட்டு மகா ஸ்தூபிகளை நிறுவியதாக பௌத்த நூல்ககள் கூறுகின்றன. ஆனால் அவை காலத்தால் அழிந்து போகவே, அசோகர் அவற்றைப் புதுப்பித்து ஸ்தூபி வழிபாட்டு மரபிற்கு ஊக்கமளித்தார். காலப்போக்கில் ஸ்தூபியைப் பாதுகாக்க அதன்மீது மரங்களாலும் ஓலைகளாலும் கூரை வேய்ந்தனர். இத்தகைய கூரைக்கட்டடங்கள் இன்று இல்லை என்றாலும் இவற்றின் அமைப்பின் அடிப்பகுதியில் மேற்கத்தியக் குன்றுகளில் குடையப்பட்ட குடைவரைகளை இன்றும் காணலம்.



பௌத்த மதத்தவர் வழிபாடு செய்வதற்கு வசதியாகக் கட்டியுள்ள குடைவரையமைப்புக் கட்டடத்தைச் சைத்தியம் என்பர். பௌத்த துறவியர்(பிட்சுகள்) தங்கி வசிப்பதற்கு வசதியாக உருவாக்கப்பட்ட கட்டடத்தை விகாரை அல்லது விகாரம் என்பர். அசோக மாமன்னன் காலத்திலிருந்தே தென்னாட்டில் ஸ்தூபிகளும் விகாரைகளும் பௌத்தச் சின்னங்களாக கட்டப்பட்டன. அவற்றுள் ஸ்தூபிகள் கருங்கற்களாளும், விகாரைகள் பெரும்பாலும் செங்கற்களாலும் கருங்கற்களாலும்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அமைக்கப்பட்டிருந்தன என்று தொல்லியல் அகழ்வாராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். விகாரையில் புத்தரின் பாதபீடிகை அமைப்பு, புத்தரின் நினைவுச் சின்னம் வழிபாட்டிற்கென வைக்கப்பட்டிருந்தன.

முற்காலத்தில் காஞ்சி, பொதிகை, உறையூர், வஞ்சி, பூதமங்கலம், சங்கமங்கை, போதிமங்கை, மதுரை முதலிய பல ஊர்களில் பௌத்த உரைவிடங்கள் இருந்தன. நாகப்பட்டினத்தில் பல்லாண்டுகள் பௌத்த விகாரை இருந்ததாகத் தொல்லியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இங்கு நரசிங்கப் போத்தரையன் காலத்தில் சீன அரசன் கட்டிய சீனக் கோயிலை மார்க்கோபோலோ கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். 1477-ஆம் ஆண்டில் இதனைப் பர்மிய அரசர் தம் கல்வெட்டில் குறித்துள்ளார். இந்துக்கள் தாம் வழிபடுவதற்கென ஆலயத்தையும் அதனருகே துறவிகள் தங்குவதற்கெனத் திருமடத்தினையும் அமைத்துக் கொள்வது இயல்பே. அதுபோன்று புத்த மதத்தினரும் சைத்தியமும் விகாரையும் அருகருகே அமைத்திருக்கின்றனர்.

**சைத்தியங்களின் அமைப்பு முறை**

முற்காலத்தில் சைத்தியங்கள் பெரும்பாலும் குகைக்கோயிளாக இருந்தன. பின் படிநிலை வளர்ச்சியில் சைத்தியங்கள் நீண்ட மண்டபங்களையும் மண்டபங்களின் இறுதியில் ஸ்தூபியையும் இணைத்துக் கொண்டன. இது இருவகையில் காணப்படுகின்றன.

1. நீணட சதுர முன்மண்டபம்
2. அரை வட்டவடிவப் பிற்பகுதி

சைத்தியங்கள் பற்றிச் சிறப்புக் குறிப்பாகக் கலைக் களஞ்சியம், "பண்டைக் காலத்தில் அரசர் அல்லது அறவோர் இறந்தபின், அவருடைய அஸ்திகளின் மீது மண்ணைக் குவிப்பது வழக்கம். அந்தக் குவியல் வடமொழியில் சைத்தியம் எனப்படும். பின்னர் இவ்வழக்கம் பௌத்தர்களிடமும் சமணர்களிடமும் மிகுதியாக வழங்கி வந்தது. அதுவே கால வளர்ச்சியில் மண்குவியலுக்குப் பதிலாகக் கல்லால் அல்லது செங்கற்களால் கும்மட்டம் போன்ற கட்டடம் எழுப்பப்பட்டது. சைத்தியம் என்பது ஒரு மண்டபத்தினுள் புனிதப் பொருள் மீதுள்ள கட்டடத்தையும் ஸ்தாபம் என்பது திறந்த வெளியிலுள்ள கோபுரத்தையும் குறிக்கலாயின. சைத்தியத்தினுள் தங்கம் வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருளால் செய்த பேழையில் இறந்தவர்களின் அஸ்தி, பல், நகம் போன்றவற்றை வைப்பர். பிற்காலத்தில் இப்பேழை இல்லாமலும் சைத்தியங்கள் கட்டடப்பட்டன"[3] (தொகுதி ஐந்து, பக்கம்-229) என்று விளக்குகிறது.



இன்றைய பல்லவனேசுவரத்தில் கண்டெடுக்கப்பட்ட அக்கால நகர இடிபாடுகளில் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தம் மடாலயம், புத்தர் சிலை, புத்தபீடம்(புத்தர் பாதம்) ஆகியவற்றின் எச்சங்கள் கிடைத்துள்ளன. 11-ஆம் நூற்றாண்டில், முதலாம் ராஜராஜ சோழனின் உதவியுடன் சூடாமணி விகாரையை சாவக மன்னனான ஸ்ரீவிஜய சூளாமணிவர்மன் புதுப்பித்துக்கட்டினான். குலோத்துங்க சோழனின் அணிமங்கலம் செப்பேட்டில்

புத்தத் துறவிகளின் உதவியுன் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த பௌத்தக் கோயிலை புதுப்பித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த “நாகர் அன்னம் விகாரை” பிற்காலத்தில் நாகனவிகாரை என அழைக்கப்பட்டது. இங்கு பௌத்தம் 15-ஆம் நூற்றாண்டுவரை தழைத்தோங்கி இருந்தது, விகாரையின் கட்டடங்கள் 18-ஆம் நூற்றாண்டுவரை இருந்தன என்று கூறப்படுகிறது. மேலும், கட்டவாக்கம் என்ற இடத்தில் அகழ்வாய்வு செய்ததில் பௌத்த கட்டிட அமைப்பு மற்றும் திரிரத்தினம் கிடைத்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**புத்த விகாரங்களும் பள்ளிகளும்**

பௌத்த பிக்குகளின் உறைவிடப் பள்ளியே விகாரை எனப்படும். புத்த விகாரங்கள் பௌத்த பிக்குகளின் உறைவிடங்கள் ஆகும். குறிப்பாக, முக்கால ஞானம் உடைய துறவிகள் வாழும் இடமே விகாரம் என்ற பெயரைப் பெறுகிறது. இவை அஜந்தா குகைகள், எல்லோரா ஆகிய இடங்களில் காணலாம். சீத்தலை சாத்தனார் காலத்தில் நாகப்பட்டினம், பூம்புகார் போன்ற இடங்களில் இவ்வகையான புத்த விகாரங்கள் இருந்ததாக கூறப்படுகிறது. குறிப்பாக, நாகப்பட்டினம் வெளிப்பாளையம் அருகே முன்பு விகாரம் இருந்தாகவும் அந்த விகாரம் சூடாமணி விஹாரம் என்றும் தொல்லியல் ஆய்வுகள் கூறுகின்றன. இதனை மெய்ப்பிக்கு வகையில் தற்போதைய வெளிப்பாளையம் மற்றும் நாணயக்காரன் தெரு ஆகிய இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட புத்தரின் செப்புத்திருமேனிகள் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.[4]

நாகப்பட்டினத்தில் இராஜராஜ சோழன் காலத்திலும் அவருடைய மகன் இராஜேந்திர சோழன் காலத்திலும் புத்த விகாரங்கள் இருந்துள்ளன. அவை முறையே இராஜராஜப் பெரும்பள்ளி இராஜேந்திரப் பெரும்பள்ளி என அழைக்கப்பட்டன. எனினும் புகார் நகரில் இருந்த பள்ளிகளே புகழ்பெற்றவையாக இருந்துள்ளன. இப்பள்ளியின் பக்கத்தே புத்தரின் திருவுருவம் எழுந்தருளிய கோயிலும் இருந்துள்ளது. பள்ளியும் விகாரமும் ஒன்று போல் தோன்றினாலும் நுணுகி நோக்கின் வேறுபட்டன ஆகும். இரண்டிலும் துறவிகள் இருப்பர் எனினும் அவர்தம் நிலையில் வேறுபாடுண்டு. விகாரத்தில் உறையும் துறவிகளைச் சாரணர் என்றும் பள்ளியில் இருப்போரை மாதவர் என்றும் சாத்தனார் குறிப்பிடுகிறார்.

சாரணர்கள் முக்கால ஞானம் உடையவர்கள். சாரணர்களுக்கு ஒப்பான ஆற்றல் மெய்யுணர்வும் பள்ளியில் வாழும் பிக்குணிகளுக்கு இருந்ததாகக் கூறப்படுவதில்லை. எனவே புத்தரின் கொள்கையில் ஈடுபட்டோருக்கு கோயில் கட்டடக்கலை அமைப்பு முறையில் இரண்டு விதமான முறை பின்பற்றப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இதனை மணிமேகலை காப்பியம் ஆராமம், உவனம், அறத்தோர் வனம், பூம்பொழில், தருமவதனம் எனப் பலப் பெயர்களால் குறிப்பிடுகிறது.[5]

**புத்தர் கோயில்கள்**

பழங்கால தமிழ் பௌத்த நூலான மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரும் வெளிநாட்டுப்பணியான யுவான் சுவாங்கும் காஞ்சிபுரத்தில் பௌத்த மதம் பரவியிருந்ததைப் பதிவு செய்கின்றனர். மேலும் பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டன. இருப்பினும் தமிழ் நாட்டில் பௌத்த கோயில்கள் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயிலில் உள்ள செவ்வப்ப நாயக்கர் கல்வெட்டின் மூலமாக கும்பகோணம் அருகே திருவிளந்துறையில் புத்தர் கோயில் இருந்ததற்கான கல்வெட்டு காணப்படுகிறது. மயிலாடுதுறை மாவட்டம் பெருஞ்சேரியிலும் நாகப்பட்டின மாவட்டம் புத்தமங்கலத்திலும் புத்தர் கோயில்கள் உள்ளன.

**முடிவுரை**

பௌத்தர்கள் புத்தரின் நினைவுச்சின்னங்களைக் கொண்டு கோயில் கட்டடங்களை எழுப்பியுள்ளனர் என்பது தெரியவருகிறது. பௌத்த மதத்தினரின் கட்டக்கலை என்பது கூரையிலிருந்து கருங்கள், குடைவரை, செங்கல் என்ற முறையில் கட்டுமானங்கள் வட்டம், கூம்பு போன்று பல்வேறு நிலையில் வளர்ச்சியடைந்துள்ளதை அறியமுடிகிறது. பிற சமயங்களில் உள்ள துறவிகளுக்கான இருப்பிடமான மடாலயங்களின் அமைப்பின் பின்னணியாக பௌத்த சமயத்திலும்; சமயக் கணக்கர்களின் இருப்பிடங்கள் கட்டப்பட்டன என்பது இலக்கியங்களும் கல்வெட்டுச் சான்றுகளும் உறுதி செய்கின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. மணிமேகலை, புலியூர் கேசிகன் உரை, ஸ்ரீ பாரதி பதிப்பகம், சென்னை, 2021.
2. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், பாரிநிலையம், 1960.
3. கலைக்களஞ்சியம், தொகுதி ஐந்து, பக்கம்-229.
4. குடந்தையில் பௌத்தம், தமிழ்ப்பொழில், துணர் 70, மலர் 1, ஏப்ரல் 1996, கரந்தை தமிழ்ச்சங்கம், தஞ்சாவூர்.
5. சோ.நா. கந்தசாமி, பௌத்தம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1977.